## மாமன்றக் கூட்டம்

**கோப்பு எண்** - ந.க.எண் **10311/2019/** எம்.சி. 8

**நாள்** - **08.11.2019** காலை **11.00** மணி

**தலைமை** - திரு.ஜெ.ஷ்ரவன்குமார், இ.ஆ.ப.,
ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,
கோயம்புத்தூர் மாநகராட்சி

**கலந்துகொண்டோர்** - துணை ஆணையர்,
அனைத்து துறை தலைமைகள்,
அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்

---

## பொருள் எண் 1

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) பகுதி – II (Phase – II) 2019-20 -ன் கீழ் ரூ. **1900.00** இலட்சத்திற்கு கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| மேற்கு மண்டலம் | | | | |
|---|---|---|---|---|
| வரிசை எண் | சிப்பம் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 | **1** | வார்டு எண் **24** -க்குட்பட்ட சுக்ரவார் பேட்டை சாலை, மாகாளியம்மன் கோயில் வீதி அருணாச்சலம் சாலை வெங்கடகிருஷ்ணன் சாலை சித்தி விநாயகர் சாலை சீனிவாச ராகவன் சாலை சுந்தரம் சாலை, ஆசாத் சாலை. மேற்கு லோகமான்யா சாலை, சர்.சி.வி ராமன் சாலை, லங்கர்கானா சாலை, அருணாச்சலம் சாலை, ஆரோக்கியசாமி சாலை மேற்கு சம்பந்தம் சாலை, ராமலிங்கம் சாலை, மெக்ரிக்கர் சாலை மற்றும் சுப்ரமணியம் சாலை ஆகிய சாலைகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 4.614 | 212.00 |
| 2 | **2** | வார்டு எண் **23** -க்குட்பட்ட குருகோவிந்த் சிங் சாலை மற்றும் சர் சண்முகம் சாலை, புண்ணியகோடி சாலை வெங்கடாசலம் சாலை ராமச்சந்திரா சாலை மற்றும் கிழக்கு பாஷ்யகாரலு சாலை ஆகிய சாலைகளுக்கு மறுதார்தளம் அமைத்தல் | 3.24 | 188.00 |
| **மொத்தம்** | | | 7.854 | 400.00 |
| தெற்கு மண்டலம் | | | | |
| வரிசை எண் | சிப்பம் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 | **3** | வார்டு எண்.**86** மற்றும் **87** க்குட்பட்ட ஆசாத் நகர் மற்றும் பள்ளி வீதி, சேரன் நகர் மற்றும் பாரதி நகர், பிருந்தாவன் சர்க்கிள் மற்றும் குறிஞ்சி நகர் பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 5.545 | 229.30 |
| 2 | 4 | வார்டு எண்.**87** மற்றும் **88** க்குட்பட்ட வசந்தம் நகர் மற்றும் அரசு பணியாளர் காலனி கே.ஜி.கே சாலை மற்றும் கங்கா நகர் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 3.935 | 175.20 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 5 | வார்டு எண்.89 மற்றும் 90 க்குட்பட்ட உயர்நிலை பள்ளி சாலை, என்.டி.பி வீதி, மருத்துவமனை ரோடு மற்றும் அண்ணா நகர், பி &டி காலனி, மருதம் நகர், சாமீம் கார்டன், பள்ளி வீதி, ராதாராம் நகர் மற்றும் அம்மா நகர், நாகபிள்ளையார் கோவில் ரோடு, பாரதி நகர், பெருமாள் நகர், கோவை கார்டன், சிறுவாணி நகர், அலமு நகர் மற்றும் ஹவுசிங் யூனிட் N பிளாக் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 5.950 | 219.50 |
| 4 | 6 | வார்டு எண்.90 க்குட்பட்ட ஹவுசிங் யூனிட் R,S,T,U,V மற்றும் W பிளாக்ஸ், 100 அடி சாலை, சாந்தி ஆஸ்ரம் ரோடு மற்றும் சரஸ்வதி நகர் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 4.520 | 167.25 |
| 5 | 7 | வார்டு எண்.90 மற்றும் 91 க்குட்பட்ட பரிபூர்ணா எஸ்டேட் ரோடு, மீனாட்சி நகர் மற்றும் லட்சுமி நகர், குளத்துபாளையம் மெயின் ரோடு மற்றும் குறுக்கு வீதிகள், விநாயகர் கோவில் வீதி, கோகுலம் காலனி, காமாட்சி நகர்ர் ஓம் சக்தி நகர், JRD கார்டன், விஷால் எஸ்டேட் மற்றும் அம்மாசைய கவுண்டர் வீதி, திரு நகர் காலனி, பாலு அவென்யூ, வசந்தம் நகர், கல்கி கார்டன் மற்றும் சுகுணாபுரம் மேற்கு வீதி ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 5.120 | 184.00 |
| 6 | 8 | வார்டு எண்.92 மற்றும் 93 க்குட்பட்ட மேட்டுகாடு மெயின் ரோடு, குமரன் கார்டன், பெருமாள்சாமி நகர், பி.கே. புதூர் சாஸ்தா நகர், ராஜராஜேஸ்வரி நகர், ஈபி காலனி, கிருஷ்ணா நகர், சுகுணாபுரம் கிழக்கு மயானம் மற்றும் லட்சுமி நகர் (பூந்தோட்டம்) ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 4.420 | 186.20 |
| 7 | 9 | வார்டு எண்.93 க்குட்பட்ட மதுரை வீரன் கோவில் வீதி, அண்ணாமணிகார் வீதி, பார்க் அவென்யூ, பாலு அவென்யூ பேஸ் II மற்றும் ஈபி காலனி திருநாவுகரசு நகர், ஜெயா நகர் மற்றும் அன்னை நகர் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 4.766 | 188.55 |
| 8 | 10 | வார்டு எண்.89,91,92&93 க்குட்பட்ட விசாலாட்சி நகர், ரூபா நகர், மருந்துவமனை குறுக்கு சாலை, பள்ளி வீதி, நஞ்சபண்டாரம் வீதி மற்றும் காமராஜர் காலனி, நேதாஜி நகர், பழைய அரிஜனா காலனி, வெள்ளிங்கிரி கவுண்டர் வீதி, பழனியப்பா நாயக்கர் வீதி, சத்தியா நகர், கோகுலம் காலனி, மருதாச்சலம் நகர், அம்மாசை கவுண்டர் குறுக்கு சாலை, நாயக்கர் வீதி, விநாயகர் கோவில் குறுக்கு வீதி மற்றும் ஐயா கவுண்டர் வீதி, ரெயின்போ காலனி பிரதான சாலை, பி.கே.புதூர், பத்ரகாளியம்மன் கோவில் வீதி, சக்தி விநாயகர் கோவில் வீதி, பழைய பள்ளிவாசல் வீதி, லட்சுமி நகர் மற்றும் சன் கார்டன் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த பகுதிகளில் சிமெண்ட் கான்கீரிட் தளம் புதுப்பித்தல் | 5.127 | 150.00 |
| | | மொத்தம் | 39.383 | 1500 |

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு கோரி அனுப்பப்பட்ட பிரேரணையினை பரிசீலித்து அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் **04.11.2019** அன்று நடைபெற்ற திட்ட அனுமதி வழங்கும் குழுவில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு TURIP 2019-20, Phase II க்கான சாலை பணிகளை மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு கீழ்கண்டவாறு

| மாநகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி (ரூ.கோடியில்) | மாநகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் மாநகராட்சி | **19.00** | **17.10** | **1.90** |

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சியில் TURIP 2019-20, Phase II க்கான திட்டத்தின்கீழ் **47.237** கி.மீ நீளத்திற்கு சாலை சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**1900.00** இலட்சத்தில் மேற்காண் பட்டியலில் உள்ள நிதி ஒதுக்கீட்டின்படி இம்மாநகராட்சி பகுதிகளில் சாலை சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கும் மற்றும் நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். **7448 /2019**/எம்டி**3**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 283 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள்: பொது சுகாதாரப்பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு இடையூறு செய்தும், தொற்று நோய் பரப்புவதற்கும், காரணமாக உள்ள பன்றிகளை உயிருடன் பிடித்து அப்புறப்படுத்த அனுமதி – மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பொதுமக்களுக்கு இடையூறாகவும், தொற்று நோய்களை பரப்புவதற்கும் மூல காரணமாக உள்ள தெருக்கள் மற்றும் சாக்கடைகளின் ஓரங்களில் சுற்றித்திரியும் பன்றிகளை எந்த ஒரு துன்புறத்தலும் செய்யாமல் உயிருடன் பிடித்து அப்புறப்படுத்தவும், பிடிக்கப்படும் பன்றி ஒன்றுக்கு ரூபாய். **300 /-** வீதம் மாநகராட்சிக்கு செலுத்துவதாக திரு.சி. ராஜலிங்கம் தி/ள். ஆல் இந்தியா பிக் அண்டு டாக் கேச்சர்ஸ், திருமங்கலம் நிறுவனத்தார் தெரிவித்துள்ளனர்.

எனவே, பொது மக்களின் நலன் கருதி கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு இடையூறு செய்யும் தொற்றுநோய் பரப்புவதற்கும் மூல காரணமாக இருக்கும் பன்றிகள் உள்ள இடங்களான போத்தனூர், சுந்தராபுரம், குனியமுத்தூர், உக்கடம் குளம், சுங்கம் குளம், சிங்காநல்லூர் உப்பிலிபாளையம் மற்றும் மாநகராட்சிற்குட்படட பகுதிகளில் தெருக்கள் மற்றும் சாக்கடை ஓரங்களில் சுற்றித்திரியும் பன்றிகளை உயிருடன் பிடித்து மாநகராட்சி எல்லைக்கு வெளியில் கொண்டு சென்று விட பிடிக்கப்படும் பன்றி ஒன்றிக்கு ரூபாய். **300/-** வீதம் மாநகராட்சிக்கு செலுத்தி பணிகளை மேற்கொள்ள திரு.சி. ராஜலிங்கம், தி/ள். ஆல் இந்தியா பிக் அண்டு டாக் கேச்சர்ஸ் , திருமங்கலம் என்ற நிறுவனத்தாருக்கு உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :- அனுமதிக்கலாம் ந க எண் **.8388 / 2019**/ எம் இ **2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 284 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

இயற்கை வடிகால்களில் ஒன்றான சங்கனூர் பள்ளத்தை சீரமைத்து கரையோரங்களில் அரைவட்ட சாலை (Semi ring road ) அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கு தி/ள். சன்கான் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட், புனே மஹாராஷ்ட்ரா (M/s. Suncon Engineers Private Limited, Pune, Maharastra) நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு அதற்கான ஒப்பந்தம் **02.11.2015**– ந் தேதியன்று மேற்கொள்ளப்பட்டது. இதை தொடர்ந்து மேற்படி நிறுவனம் ரூ. **190.00** கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து மாநகராட்சிக்கு வழங்கியது.

மேற்படி நிறுவனம் சமர்ப்பித்த ரூ. **190** கோடிக்கான விரிவான திட்ட அறிக்கையின் மீது தமிழ்நாடு நகர்புர உட்கட்டமைப்பு நிதி சேவை கழகம் (TNUIFSL) சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகங்களில் கடந்த **25.05.2017** மற்றும் **10.06.2017**–ம் தேதிகளில் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டங்களில் கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டதின் பேரில் கீழ்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டன.

**1.** முதல் கட்டமாக (Under Phase–I) சங்கனூர் பள்ளத்தின் சீரமைப்பு மற்றும் அதன் கரையோரங்களில் நடைபாதை அமைத்தல்

**2.** மேற்படி பணி மேற்கொள்ள சங்கனூர் பள்ளத்தின் கரையோரங்களில் வசிக்கும் மக்களின் சுற்றுச்சூழல் மற்றும் அந்த சமுதாயத்தின் மதிப்பீடுகளுக்கான அறிக்கை தயாரித்தல் (Environmental and Socio impact assessment) மற்றும் விரிவான திட்ட அறிக்கையில் அதற்கான வழிவகை செய்தல், அதன் விளைவாக திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகையை உத்தேசமாக மதிப்பிடுதல் மற்றும் நில ஆர்ஜித நஷ்ட ஈட்டுத் தொகையை நடைமுறை சட்டத்திற்கு ஏற்ப கணக்கிடுதல் ஆகியவற்றுடன்பருவமழை அளவு ஆகியவற்றின் மீது அளவீட்டுப்பணி (Survey Work) மேற்கொள்ளுதல் ஆகும்.

திருத்திய விரிவான திட்ட அறிக்கை குறித்து நகராட்சி நிர்வாக ஆணையரது அறிவுரைகளை கருத்தில் கொண்டு கூடுதல் இனங்களாக ( (i.e) Additional items of work) பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டது, அதனை தொடர்ந்து மேற்படி நிறுவனம் இப்புதிய கூடுதல் பணிகளுக்காக, ( for Additional items of work) திட்ட அறிக்கை ரூ. **76,12,500/–** யை (exclusive of GST) சமர்ப்பித்தது. மேற்படி பொருள் குறித்து மாமன்றம்மூலம் (மாமன்ற தீர்மான எண்.**217** நாள்.**03.08.2018**) தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்கண்ட நிறுவனத்திற்கு ரூ.**73,82,000/–** (விலை குறைப்பிற்கு பின்) பணிஉத்திரவு வழங்குவதற்கு ஒப்புதல் அளித்தபோது அந்நிறுவனம் குறிப்பிட்ட Exclusive of 18% GST என்ற சொற்தொடரை மாமன்ற தீர்மானத்தில் தெரிவிக்க விடுபட்டு விட்டது. இவ்விடுப்பட்டது தற்செயலாக ஏற்பட்ட ஒன்றாகும்.

ஆகவே, மேற்படி நிறுவனம் செய்து முடித்துவிட்ட பணிக்கான GST தொகை ரூ.**13,28,760/–**யை (GST 18% of 73,82,000/-) மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

அ) சங்கனூர் பள்ளத்தினை சீரமைக்க புதிய கூடுதல் பணிகளை தி/ள். சன்கான் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட், புனே மஹாராஷ்ட்ரா (M/s. Suncon Engineers Private Limited, Pune, Maharastra) நிறுவனம் செய்து முடித்துவிட்ட பணிக்கான GST தொகை ரூ.**13,28,760/–**யை பொது நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி GST க்கான செலவினத்தை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க. எண். **3615**/**12**/ஜேஎன். **4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 285 நாள் 08.11.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் **43**-க்குட்பட்ட அதிர்ஷ்டலட்சுமி கார்டன் பகுதியில் உள்ள பூங்கா ஒதுக்கீடு இடம் முட்புதர்கள் மண்டி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும், அம்மனைபிரிவில் வசிக்கும் மக்கள் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் குறைத்தீர்க்கும் கூட்டத்திலும் கோரிக்கை வைத்து வருகின்றனர். எனவே, குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பூங்கா அமைக்க ரூ.**52,00,000**/-க்கு மதிப்பீடுச் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.**10092**/**2019**/எம்.டி.**2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 286 நாள் 08.11.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 18 குட்பட்ட அலமேலு மங்கை அவென்யூ பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு **:**

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| **1** | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 18 குட்பட்ட அலமேலு மங்கை அவென்யூ பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண். 10165/2019/எம்.டி2) | **57.00** |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10165 /2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 287 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்–17குட்பட்ட பொம்மணம் பாளையம் பகுதியில் மயனாத்திற்கு எதிரில் பொது கழிப்பிடம் கட்டுதல் போன்ற பணிக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு **:**

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| **1** | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 17 குட்பட்ட பொம்மணம்பாளையம் பகுதியில் மயனாத்திற்கு எதிரில் பொது கழிப்பிடம் கட்டுதல். (ந.க.எண். 10162 /2019/எம்.டி2) | **15.00** |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10162 /2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 288 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 18 குட்பட்ட டாடா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 18 குட்பட்ட டாடா நகர் குறுக்கு சாலைப் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண். 10164 /2019/எம்.டி2) | **70.50** |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10164 /2019/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 289 நாள் 08.11.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 19 குட்பட்ட அஜ்ஜனூர் பிரதான சாலை முதல் சிறுவாணி பிரதான சாலை சந்திப்பு பகுதியில் தடுப்பு சுவர் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண் – 19 குட்பட்ட அஜ்ஜனூர் பிரதான சாலை முதல் சிறுவாணி பிரதான சாலை சந்திப்பு பகுதியில் தடுப்பு சுவர் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண். 10166 /2019/எம்.டி2) | **98.60** |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10166 /2019/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 290 நாள் 08.11.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 19 குட்பட்ட வீரகேரளம் பிரதான சாலை பகுதியில் சிறுவாணி பிரதான சாலை முதல் அனாஸ் கார்டன் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 19 குட்பட்ட வீரகேரளம் பிரதான சாலை பகுதியில் சிறுவாணி பிரதான சாலை முதல் அனாஸ் கார்டன் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண்.10158 /2019/எம்.டி2) | **99.50** |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10158/2019/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 291 நாள் 08.11.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண்** 10

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 19 குட்பட்ட வீரகேரளம் பிரதான சாலை பகுதியில் அனாஸ் கார்டன் முதல் அக்ரி கேட் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு **:**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 19குட்பட்ட வீரகேரளம் பிரதான சாலை பகுதியில் அனாஸ் கார்டன் முதல் அக்ரி கேட் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண். 10159 /2019/எம்.டி2) | 99.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10159 /2019/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 292 நாள் 08.11.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 11**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 15, 16, 17, 18 & 19 குட்பட்ட பகுதியில் உள்ள பி.என்.புதூர் , வடவள்ளி, கல்வீரம்பாளையம், பொம்மணம்பாளையம், சுண்டப்பாளையம் மற்றும் வீரகேரளம் மாநகராட்சி ஆரம்ப, நடுநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு கருவி வழங்கி மற்றும் பராமரித்தல் பணிக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு **:**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 15, 16, 17, 18 & 19 குட்பட்ட பகுதியில் உள்ள பி.என்.புதூர் , வடவள்ளி, கல்வீரம்பாளையம், பொம்மணம்பாளையம், சுண்டப்பாளையம் மற்றும் வீரகேரளம் மாநகராட்சி ஆரம்ப, நடுநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு கருவி வழங்கி மற்றும் பராமரித்தல் (ந.க.எண்.10171/2019/எம்.டி2) | 12.50 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10171/2019/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 293 நாள் 08.11.2019</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 19 குட்பட்ட இராகவேந்திரா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 19 குட்பட்ட இராகவேந்திரா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண். 10168 /2019/எம்.டி2) | 57.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10168 /2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 294 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 18 குட்பட்ட டாடா நகர் பிரதான சாலை முதல் மகாராணி அவென்யூ 5வது பேஸ் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 18குட்பட்ட டாடா நகர் பிரதான சாலை முதல் மகாராணி அவென்யூ 5வது பேஸ் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண். 10167 /2019/எம்.டி2) | 98.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10167 /2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 295 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 16 குட்பட்ட திருமுருகன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 16 குட்பட்ட திருமுருகன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் (ந.க.எண். 10169 /2019/எம்.டி2) | 75.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10169 /2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 296 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 15 குட்பட்ட பழனியப்பா நகர் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு **:**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 15குட்பட்ட பழனியப்பா நகர் முதல் கருப்பராயன் கோவில் பள்ளம் வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல்.(ந.க.எண். 10161 /2019/எம்.டி2) | 82.50 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10161 /2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 297 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 15 குட்பட்ட புதுகிணறு வீதி மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு **:**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 15குட்பட்ட புதுகிணறு வீதி மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண். 10160 /2019/எம்.டி2) | 72.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10160/2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 298 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 15 குட்பட்ட நேதாஜி பிரதான சாலை முதல் அண்ணா வீதி தெற்கு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 15குட்பட்ட நேதாஜி பிரதான சாலை முதல் அண்ணா வீதி முதல் தெற்கு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். (ந.க.எண். 10172/2019/எம்.டி2) | 84.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10172/2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 299 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 15 குட்பட்ட நேதாஜி பிரதான சாலை பகுதியில் மருதமலை பிரதான சாலை முதல் அண்ணா வீதி வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 15குட்பட்ட நேதாஜி பிரதான சாலை பகுதியில் மருதமலை பிரதான சாலை முதல் அண்ணா வீதி வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல்.(ந.க.எண். 10173 /2019/எம்.டி2) | 84.50 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10173 /2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 300 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 19

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 16 குட்பட்ட வடவள்ளி தெற்கு பகுதியில் சேதமடைந்த மாநகராட்சி நடுநிலைப் பள்ளி கட்டிடத்தினை இடித்து புதிகாக பள்ளி கட்டிடம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 16குட்பட்ட வடவள்ளி தெற்கு பகுதியில் சேதமடைந்த மாநகராட்சி நடுநிலைப் பள்ளி கட்டிடத்தினை இடித்து புதிகாக பள்ளி கட்டிடம் கட்டுதல். (ந.க.எண் 10170 /2019/எம்.டி2) | 75.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10170 /2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 301 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 17 குட்பட்ட பொம்மணம் பாளையம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள எரியூட்டும் மயானத்திற்கு எரியூட்டு உபகரணங்கள் வழங்கி மற்றும் பொருத்துதல் மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு **:**

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| **1** | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் – 17 குட்பட்ட பொம்மணம்பாளையம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள எரியூட்டும் மயானத்திற்கு எரியூட்டு உபகரணங்கள் வழங்கி மற்றும் பொருத்துதல். (ந.க.எண் 10163 /2019/எம்.டி2) | **95.50** |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10163 /2019/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 302 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 21

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண்.32 மற்றும் வார்டு எண்.67 க்குட்பட்ட விளாங்குறிச்சி சேரன் மாநகர் பகுதி, திருவள்ளுவர் வீதி, சுப்ரமணியர் கோவில் வீதி, சுப்பையா தேவர் காலனி மற்றும் இவ்வார்டுக்கு உட்பட்ட பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல், கிணற்றை ஆழப்படுத்துதல் மற்றும் கிணற்றுநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி மற்றும் வார்டு எண்.37 க்குட்பட்ட தண்ணீர் பந்தல் பகுதியில் உள்ள சுகாதார ஆய்வாளர் அலுவலகம் பராமரிப்பு பணி செய்ய மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகிறது, அதன் விபரம்

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 32 | வார்டு எண்.32 க்குட்பட்ட விளாங்குறிச்சி சேரன் மாநகர் பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் கிணற்றுநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி(ந.க.எண்.10183/2019/எம்.டி.3) | 3.30 |
| 2 | 67 | வார்டு எண்.67 க்குட்பட்ட திருவள்ளுவர் வீதி, சுப்ரமணியர் கோவில் வீதி மற்றும் சுப்பையா தேவர் காலனி பகுதியில் ஆழ்துளை கிணற்றை ஆழபடுத்தி மற்றும் கிணற்றுநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி ந.க.எண்.10184/2019/எம்.டி.3 | 4.98 |
| 3 | 37 | வார்டு எண்.37 தண்ணீர் பந்தல் பகுதியில் உள்ள சுகாதார ஆய்வாளர் அலுவலகம் பராமரிப்பு பணி செய்தல் ந.க.எண்.10185/2019/எம்.டி.3 | 3.20 |

மேற்படி பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.10183/2019/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 303 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 22**

கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண் 23-க்குட்பட்ட மேற்கு மண்டலம் வளாகத்தில் கூடுதல் அறைகள், தரை மற்றும் முதல் தளங்களில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென பிரத்யேக கழிவறைகள் கட்டுதல் பணி மிகவும் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.77.30 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.10265/2019/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 304 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 23**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்:36க்குட்பட்ட காளப்பட்டி மாநகராட்சி துவக்கப்பள்ளியில் 295 மாணவ-மாணவியர் பயின்று வருவதாகவும் மேலும் இப்பள்ளியில் ஆங்கில வழி கல்வி மூலம் மாணவ-மாணவியர் சேர்க்கப்பட்டு பயின்று வருகின்றனர்.மேலும் இப்பள்ளியில் 8 வகுப்பறைகள் மட்டுமே உள்ளது. அதனால் வகுப்பறை பற்றாக்குறை உள்ளதாகவும் .ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள வகுப்பறைகள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் அவற்றை மராமத்து பணிகள் செய்து தர வேண்டியும் பள்ளி தலைமை ஆசிரியர் கோரிக்கை வைத்துள்ளனர் ,மேலும் இப்பள்ளியை மாநகரப் பொறியாளர்,நிர்வாக பொறியாளர்(கிழக்கு) மற்றம் உதவி ஆணையாளர்(கிழக்கு) அவர்களும் நேரில் ஆய்வு செய்து கூடுதல் வகுப்பறை கட்டவும் ஏற்கனவே உள்ள வகுப்பறைகளுக்கு பராமரிப்பு பணி செய்யவும் மதிப்பீடு தயாரிக்க உத்திரவிட்டுள்ளனர்.அதன்பேரில் படிக்கட்டுடன் கூடிய 4 வகுப்பறைகள்,கழிப்பறைகள் மற்றும் ஏற்கனவே உள்ள வகுப்பறைகளுக்கு மராமத்து பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ77,50,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண் 10301/2019/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 305 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 24**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட காளப்பட்டி மற்றும் விளாங்குறிச்சி குடிநீர்விநியோகப்பிரிவு பகுதிகளில் உள்ள குடிநீர்மேல்நிலைதொட்டிகள் சிறிய கொள்ளளவு கொண்டதாலும் போதிய பாதுகாப்பு இல்லாததாலும் தனியாக குளோரின் கலக்க முடியாத சுழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு கரட்டுமேடு, விளாங்குறிச்சி சாலையில் மேற்படி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் பிரதான குழாய்களில் வாயு குளொரினேசன் முறை மூலம் குடிநீரில் செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பகுதியில் வாயு குளொரினேசன் இயந்திரங்கள் நிறுவவும் அதற்கு தேவையான கட்டிடம் கட்டவும் மதிப்பீடு ரூ17,20,000/-தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10305 /2019/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 306 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 25

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் 82 க்குட்பட்ட பிரதான அலுவலகத்தில் உள்ள பழுதடைந்த பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் சேம்பர்கள் மாற்றியமைத்தல் பணிக்கு ரூ.15,00,000/- ற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.10314/2019/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 307 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 26

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 32-க்குட்பட்ட விளாங்குறிச்சி பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பொது ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் பணி செய்தல் மற்றும் சேரமன்மாநகர் பகுதியில் உள்ள உயர்கோபுர மின்விளக்கு மாற்றி அமைத்தல், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆணையரின் நேராய்வின்போது பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ள உத்திரவிட்டுள்ளார். எனவே, உடனடியாக இம்மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள பணிகள் செய்ய அவசர அவசியமாகிறது. எனவே நிர்வாக அனுமதி வேண்டி மன்ற கூட்டத்திற்கு இம்மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 32 | வார்டு எண் 32-க்குட்பட்ட விளாங்குறிச்சி பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் பொது ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் பணி செய்தல்<br><br>ந.க.எண் 10377/2019/MD3 | 59.50 |
| 2 | 32 | வார்டு எண் 32-க்குட்பட்ட சேரன் மாநகர் பகுதியில் உள்ள உயர்கோபுர மின்விளக்கு மாற்றி அமைத்தல் பணி<br><br>ந.க.எண் 10378/2019/MD3 | 2.95 |
| 3 | 32 | வார்டு எண் 32-க்குட்பட்ட சேரன் மாநகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி<br><br>ந.க.எண் 10379/2019/MD3 | 75.00 |

மேற்படி பணிகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 10379/2019/MD3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 308 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 27**

கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரம் - மேற்கு மண்டலம் வார்டு எண்கள். 9,6,7 மற்றும் 18-க்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் குப்பை அள்ளுவது சம்மந்தமாகவடிகால் சுத்தம் செய்தல் மற்றும் இதர சுகாதார பணிகள் மேற்கொள்ள தற்காலிக பணியாளர்களை அமர்த்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.67,00,000/- ஆகும்.

எனவே மூன்று மாத காலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.67,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10120/2019/ME4(ME3)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 309 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 28**

கோயம்புத்தூர் மாநகராட்சி- பொது சுகாதாரம் - வடக்கு மண்டலம் வார்டு எண்கள். 1,2,55,44,46,47,3 மற்றும் 28 -க்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் குப்பை அள்ளுவது சம்மந்தமாக வடிகால் சுத்தம் செய்தல் மற்றும் இதரசுகாதார பணிகள் மேற்கொள்ள தற்காலிக பணியாளர்களை அமர்த்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேசசெலவினம் ரூ.73,00,000/-ஆகும்.

எனவே மூன்று மாதகாலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.73,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10118/2019/ME4(ME3)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 310 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 29**

கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரம் - மத்திய மண்டலம் வார்டு எண்கள். 80,45,52,70,81,51,82 மற்றும் 83-க்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மூன்று மாதகாலத்திற்கு ஒப்பந்தஅடிப்படையில் குப்பை அள்ளுவது சம்மந்தமாக வடிகால் சுத்தம் செய்தல் மற்றும் இதரசுகாதார பணிகள் மேற்கொள்ள தற்காலிக பணியாளர்களை அமர்த்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.55,00,000/- ஆகும்.

எனவே மூன்று மாதகாலத்திற்கு மேற்படிபணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.55,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10513/2019/ME4(ME3)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 311 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 30**

கோயம்புத்தூர் மாநகராட்சி- பொது சுகாதாரம் - அனைத்து மண்டல பகுதிகளில் தெரு நாய்கள் பிடிப்பதற்கு தேவையான தற்காலிக பணியாளர்களை 6 மாத காலத்திற்கு பணி அமர்த்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.9,00,000/-ஆகும்.

எனவே ஆறு மாதகாலத்திற்கு மேற்படிபணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10515/2019/ME2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 312 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 31**

கோயம்புத்தூர் மாநகராட்சி- பொது சுகாதாரம் - கிழக்கு மண்டலம் வார்டு எண்கள். 32,35,37 மற்றும் 65-க்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் குப்பை அள்ளுவது சம்மந்தமாக வடிகால் சுத்தம் செய்தல் மற்றும் இதரசுகாதார பணிகள் மேற்கொள்ள தற்காலிக பணியாளர்களை அமர்த்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேசசெலவினம் ரூ.55,00,000/-ஆகும்.

எனவே மூன்று மாதகாலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.55,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10122/2019/ME4(ME3)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 313 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 32**

கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரம் - தெற்கு மண்டலம் வார்டு எண்கள். 89,96,95,92 மற்றும் 90-க்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் குப்பை அள்ளுவது சம்மந்தமாகவடிகால் சுத்தம் செய்தல் மற்றும் இதர சுகாதார பணிகள் மேற்கொள்ள தற்காலிக பணியாளர்களை அமர்த்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.74,00,000/- ஆகும்.

எனவே மூன்று மாத காலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.74,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10110/2019/ME4(ME3)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 314 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 33**

கோயம்புத்தூர் மாநகராட்சி- பொதுசுகாதாரம் - மத்திய மண்டலத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டபணிகளுக்கு குப்பை அள்ளுவது சம்மந்தமாக ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாதகாலத்திற்கு கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு ஒட்டுனர்கள் பணி அமர்த்துதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.75,00,000/- ஆகும்.

எனவே ஆறு மாதகாலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.75,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10516/2019/ME5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 315 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 34**

கோயம்புத்தூர் மாநகராட்சி- பொது சுகாதாரம் - மத்திய, கிழக்கு மற்றும் வடக்கு மண்டலங்களில் திடக்கழிவு மேலாண்மை திட்டபணிகளுக்கு குப்பை அள்ளுவது சம்மந்தமாக ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாதகாலத்திற்கு வாகனங்களுக்கு துலக்குனர்கள் பணி அமர்த்துதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.60,00,000/-ஆகும்.

எனவே ஆறு மாத காலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.60,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10514/2019/ME5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 316 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 35**

கோயம்புத்தூர் மாநகராட்சி- பொது சுகாதாரம் - கிழக்கு மண்டலத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டபணிகளுக்கு குப்பை அள்ளுவது சம்மந்தமாக ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாதகாலத்திற்கு கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு ஒட்டுனர்கள் பணி அமர்த்துதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது இதற்கான உத்தேச செலவினம் ரூ.58,00,000,-ஆகும்.

எனவே ஆறு மாதகாலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.58,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10123/2019/ME5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 317 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 36**

கோயம்புத்தூர் மாநகராட்சி- பொது சுகாதாரம் - தெற்கு மற்றும் மேற்கு மண்டலங்களில் திடக்கழிவு மேலாண்மை திட்டபணிகளுக்கு குப்பை அள்ளுவது சம்மந்தமாக ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாத காலத்திற்கு வாகனங்களுக்கு துலக்குனர்கள் பணி அமர்த்துதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.31,00,000/-ஆகும்.

எனவே ஆறு மாதகாலத்திற்கு மேற்படிபணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.31,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10113/2019/ME5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 318 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 37**

கோயம்புத்தூர் மாநகராட்சி- பொது சுகாதாரம் - மேற்கு மண்டலத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டபணிகளுக்கு குப்பை அள்ளுவது சம்மந்தமாக ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாதகாலத்திற்கு கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு ஒட்டுனர்கள் பணி அமர்த்துதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது இதற்கான உத்தேச செலவினம் ரூ.53,00,000,-ஆகும்.

எனவே ஆறு மாதகாலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.53,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10114/2019/ME5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 319 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 38**

கோயம்புத்தூர் மாநகராட்சி - ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு ஜெட்டிங் மெஷின் வாகனங்களுக்கு ஓட்டுனர்கள் பணியமர்த்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.14,00,000/- ஆகும்.

எனவே ஒரு வருட காலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.14,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10517/2019/ME5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 320 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 39**

கோயம்புத்தூர் மாநகராட்சி- பொதுசுகாதாரம் - பிரதான அலுவலகத்தில் குப்பை அள்ளுவது சம்மந்தமாக ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாத காலத்திற்கு கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு ஓட்டுனா்கள் பணியமா்த்தும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரா் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.70,00,000/-ஆகும்.

எனவே ஆறு மாத காலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.70,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10119/2019/ME5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 321 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 40**

கோயம்புத்தூர் மாநகராட்சி- பொது சுகாதாரம் - தெற்கு மண்டலத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டபணிகளுக்கு குப்பை அள்ளுவது சம்மந்தமாக ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாதகாலத்திற்கு கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு ஒட்டுனா்கள் பணி அமா்த்துதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகோரி ஒப்பந்ததாரா் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது இதற்கான உத்தேச செலவினம் ரூ.46,00,000,-ஆகும்.

எனவே ஆறு மாதகாலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.46,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10111/2019/ME5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 322 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 41**

கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரம் - வடக்கு மண்டலம் வாா்டு எண். 4,27,40 மற்றும் 41-குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநா்கள் மற்றும் துலக்குனா்கள் கொண்டு டிப்பா் லாரிகள் மூலம் நான்கு மாத காலத்திற்கு குப்பைகளை அகற்றும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரா் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.63,00,000/- ஆகும்.

எனவே நான்கு மாத காலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.63,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10117/2019/ME4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 323 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 42**

கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரம் - தெற்கு மண்டலம் வாா்டு எண்கள். 76,77,79,90 மற்றும் 93-குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநா்கள் மற்றும் துலக்குனா்கள் கொண்டு டிப்பா் லாரிகள் மூலம் நான்கு மாத காலத்திற்கு குப்பைகளை அகற்றும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரா் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.44,00,000/- ஆகும்.

எனவே நான்கு மாத காலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.44,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10112/2019/ME4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 324 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 43**

கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரம் - கிழக்கு மண்டலம் வார்டு எண்கள். 57,58,67,69,34,35 மற்றும் 36-குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்கள் மற்றும் துலக்குனர்கள் கொண்டு டிப்பர் லாரிகள் மூலம் ஆறு மாத காலத்திற்கு குப்பைகளை அகற்றும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.57,00,000/- ஆகும்.

எனவே ஆறுமாத காலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.57,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10121/2019/ME4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 325 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 44**

கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரம் - மேற்கு மண்டலம் வார்டு எண்கள். 11,17,22,23,12 மற்றும் 24-குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்கள் மற்றும் துலக்குனர்கள் கொண்டு டிப்பர் லாரிகள் மூலம் நான்கு மாத காலத்திற்கு குப்பைகளை அகற்றும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.69,00,000/- ஆகும்.

எனவே நான்கு மாத காலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.69,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10115/2019/ME4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 326 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 45**

கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரம் கிழக்கு மண்டலத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டபணிகளுக்கு குப்பை அள்ளுவது சம்மந்தமாக ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாத காலத்திற்கு கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு ஓட்டுனர்கள் பணியமர்த்துதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.55,00,000/-ஆகும்.

எனவே ஆறு மாத காலத்திற்கு மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.55,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்:- 10116/2019/ME5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 327 நாள் 08.11.2019**

அனுமதிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஜெ. ஷ்ரவன்குமார்,
ஆணையர் மற்றும் தனி அதிகாரி,
கோயம்புத்தூர் மாநகராட்சி